III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.288/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandanraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08-03-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Dilla | Village | : |
| Husband Name | : John Beski | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

நான் சென்னை ஆவடிக்கு அருகில் உள்ள முத்தாபுதுப்பேட்டை, சபி நகர், விநாயகர் கோயில் தெருவில் கடந்த 30 வருடமாக வசித்து வருகிறேன். அந்த ஊர் தான் எனது பூர்வீகம். அதற்கு முன்னர் நான் முத்தாபுதுபேட்டையில் வசித்து வந்தேன். இவ்வழக்கில் நான் தரப்பினர் அல்ல. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. சாட்சியம் அளிக்க என்னை வாதிகள் அழைத்தனர். இவ்வழக்கின் எண் எனக்கு தெரியாது. இவ்வழக்கை பாக்கியலட்சுமியும், அந்தோணியம்மாளும் தாக்கல் செய்துள்ளனர். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு தான் நான் கையொப்பமிட்டேன். வழக்கிடை சொத்து ஆவடி முத்தாபுதுப்பேட்டை ராஜிவ் நகரில் உள்ளது. வாதிகள் தங்களுக்கு தாவா சொத்தில் வீடு வேண்டும்ட என்று கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1800 சதுரடி. அதன் சர்வே எண் எனக்கு ஞாபகத்தில் இல்லை. தாவா சொத்திற்கான நான்கு திசைகள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கு புற அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் சொல்லியுள்ள, பிரதிவாதிகள் எனது சித்தியிடமிருந்து நீதித்துறையல்லாத முத்திரை தாள் மற்றும் ரசீதுகள், வெள்ளை காதிகதங்களில் கையேழுத்து வாங்கினார்கள் என்பது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால், எனது சித்தி சரோஜா அம்மாள் இறந்த பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. சரோஜா அம்மாள் முதலாம் பிரதிவாதி கிருஷ்ண மூர்த்திக்கு ஒரு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதலாம் பிரதிவாதி சரோஜா அம்மாளிடம் ஏமாற்றி பவர் பத்திரம் போலியாக தயாரித்து பதிவு

செய்துள்ளதாக நான் பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் சரோஜா அம்மாள் இறந்த பிறகு தெரிய வந்தது. சரோஜா அம்மாள் அது குறித்து பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அவரால் எடுக்க முடியவில்லை. அவரது உடல் நிலை குன்றிவிட்டது. 23.08.2010 அன்று சரோஜா அம்மாள் இறந்தார். சரோஜா அம்மாள் இறந்த பிறகு பிரதிவாதிகள் இவ்வழக்கு வாதிகளின் மீது தாக்கல் செய்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது வீணான வழக்கு. சரோஜா அம்மாள் இரண்டாம் வாதிக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் உயில் எழுதும் போதே எனக்கு தெரியவந்தது. 2008 ல் சரோஜா அம்மாள் முதலாம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்து தொகையை பெற்றுக் கொண்டு சொத்தின் அசல் ஆவணங்களை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் முதலாம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் பொய். பிரதிவாதிகள் போலி பத்திரம் தயார் செய்து கொண்டதாக நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதாகையால் நான் அவர்களை சார்ந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் வில்மா என்பவர் இவ்வழக்கில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு உடல் நிலை குன்றிவிட்டது. நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் ஆதலால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.